ஊடக அறிவித்தல் இல. 03

# தேர்தல் ஆணைக்குழு

## அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான வசதிகள்

## பாராளுமன்றத் தேர்தல் - 2020.04.25

## அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு எதிர்பார்க்கும், அதற்குத் தகுதிபெற்றுள்ள அரச அலுவலர்கள் / பாதுகாப்புப் பிரிவுகளின் அலுவலர்களுக்கு விடுக்கப்படும் அறிவித்தல்

1. அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பித்தல் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை, தற்போது அனைத்து அமைச்சுக்களுக்கும், திணைக்களங்களங்களுக்கும், ஆணைக்குழுக்களுக்கும், மாகாண சபைகளுக்கும், நியதிச்சட்ட கூட்டுத்தாபனங்களுக்கும் சபைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

2. 2020.04.25 ஆந் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலின்போது தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்திக் கொள்வதற்கு எதிர்பார்க்கும் அனைத்து அரச அலுவலர்கள்/ஊழியர்கள், பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், இலங்கை போக்குவரத்துச் சபையின் அலுவலர்கள்/ஊழியர்கள், அஞ்சல் திணைக்களத்தின் அலுவலர்கள்/ஊழியர்கள், புகையிரதத் திணைக்களத்தின் அலுவலர்கள்/ஊழியர்கள், முப்படைகளினதும் பொலிஸ் திணைக்களத்தினதும் முனைப்பான பாதுகாப்புச் சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சிவில் பாதுகாப்புப் படையணியின் அங்கத்தவர்கள் இத்தேர்தலின்போது அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்குத் தகுதி பெறுவார்கள் என்பதுடன், அஞ்சல் மூலம் வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் ஏற்றுக்கொள்ளப்படும் காலம், 2020.03.16 ஆந் திகதி நள்ளிரவு 12.00 மணியுடன் முடிவடையவுள்ளது என்பதை அறிவிக்கின்றேன்.

3. அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள், அஞ்சல் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களை தனிப்பட்ட முறையில் பரீட்சித்துப் பார்த்து விண்ணப்பகாரரின் ஆளடையாளம் பற்றிய ஐயம் நீங்கிய பின் விண்ணப்பத்தை அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு அத்தாட்சிப்படுத்திய விண்ணப்பங்கள், இயன்றளவு உடனடியாக வாக்காளரின் வாக்குப்பதிவு மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்குக் கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி மீண்டும் நீடிக்கப்பட மாட்டாது என்பது வலியுறுத்தப்படுகிறது. அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி இரண்டு நாட்களில் அத்தாட்சிப்படுத்தும் விண்ணப்பங்களை அஞ்சலிடுவதற்காக ஒப்படைப்பதற்குப் பதிலாக, மிக சமீபத்திலுள்ள மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திற்கு நேரில் சென்று ஒப்படைப்பது உகந்ததென்பதை தயவுசெய்து கவனத்திற்கொள்ளவும்.

4. அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்களை பூரணப்படுத்துவதற்குத் தேவையான 2019 தேருநர் இடாப்புத் தகவல்களை தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் (www.elections.gov.lk) சஞ்சரிப்பதன் மூலமும், 1919 என்ற இலக்கம் ஊடாக அரசாங்க தகவல் மையத்துடன் தொடர்புகொள்வதன் மூலமும் பெற்றுக்கொள்ள முடியும். இதற்கு மேலதிகமாக, தேவைப்படும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு 2019 தேருநர் இடாப்புக்கள் பின்வரும் இடங்களிலும் வெளிக்காட்டி வைத்திருக்கப்படும்:-

   - ❖ அனைத்து மாவட்ட செயலகங்களிலும் (கச்சேரிகளில்)
   - ❖ அனைத்து மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களிலும்
   - ❖ அனைத்து பிரதேச செயலகங்களிலும்
   - ❖ அனைத்து கிராம அலுவலர் அலுவலகங்களிலும்

   } குறித்த அதிகார இடப்பரப்பிற்குரிய வாக்கெடுப்புப் பிரிவின் தேருநர் இடாப்பு

5. மேலே குறிப்பிடப்பட்ட இடங்களுக்கு மேலதிகமாக,

   - * பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07.
   - * தொழில் திணைக்களம், தொழில் செயலகம், நாரஹேன்பிட்ட, கொழும்பு 05.
   - * கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்லை.
   - * பதிவாளர் நாயகம் திணைக்களம், 243/3/A, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.
   - * அஞ்சல் தலைமையகம், டி.ஆர் விஜேயவர்தன மாவத்தை, கொழும்பு 10.
   - * கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சு, மாளிகாவத்தை.
   - * செத்சிறிபாய - கட்டம் 1 அலுவலகக் கட்டிடத்தொகுதி, பத்தரமுல்லை ஆகிய கொழும்பு மாவட்டத்தின் அரசாங்க அலுவலக கட்டிடத்தொகுதிகளில் தேருநர் இடாப்புக்களின் தகவல்களை கணினியின் துணையுடன் விண்ணப்பகாரர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)

தேர்தல் ஆணைக்குழு,